**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசித்திங்கள் 29 ம் நாள்

**இ.ம.எண். 18/2025**

**in**

**அ.வ.எண். 331/2015**

1. P.சிவக்குமார் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. கார்த்திகேயகுருக்கள்
2. S.K.ராஜசேகரன்
3. S.K.மகேஸ்வரன்
4. தமிழ்நாடு அரசுக்காக
   மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   திருப்பூர்
5. தமிழ்நாடு அரசுக்காக,
   தாசில்தார் அவர்கள்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   காங்கயம் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 24.02.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணக்குமார், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள்/4, 5

பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் மனுவில் கண்டுள்ளபடி திருத்தம் செய்துகொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

i) அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் பேரில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாவில் கண்டுள்ள சொத்துக்கள் உள்ள இடமும், மற்ற இடங்களும் சர்வே 723 நெம்பரில் 39 ஏக்கர் உள்ள இடம் 4, 5 எதிர்மனுதார்கள்/4, 5 பிரதிவாதிகளின் அரசுக்கு சொந்தமான இடங்களாகும். அதில் 1911 ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சர்வே ரீ செட்டில்மெண்ட் ரிஜிஸ்ட்டரில் சிவன் மலை நத்தம் என்று பதியப்பட்டுள்ளது. 1984 ம் ஆண்டில் அரசால் மேற்கொள்ளப்பட்ட நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின்படி மேற்கண்ட நிலப்பரப்பில் உள்ள இடத்தில் 14 ஏக்கர் 80 செண்ட் நிலத்தை சர்வே 1095/1 என்று உட்பிரிவு செய்து சிவன்மலை ஊர்நத்தம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் முழுவதும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான இடமாகும்.

ii) அவ்வாறு இருக்கும் நிலையில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பிதுராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று பொய்யாக உரிமை கொண்டாடியுள்ளார்கள். தாவா வழக்கு 1 லக்க சொத்தை மனுதாரரின் தகப்பனார் பழனிச்சாமி என்பவர் ஆர்ஜிதம் செய்து அந்த இடத்தில் உணவகம் மற்றும் தேநீர் கடை வைத்து தனது அனுபவத்தில் வைத்து 60 ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளார். மனுதாரரது தகப்பனார் கடை வைத்து தொழில் செய்து வந்துள்ள முகவரிக்கு மனுதாரரது தகப்பனாருக்கு தாராபுரம் உதவி அமர்வு நீதிமன்றத்தின் அமர்வு வழக்கு எண். 49/1993 ல் நடைபெற்ற வழக்கிலிருந்து அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். இதன்மூலம் மனுதாரரின் தகப்பனார் பழனிச்சாமி என்பவர் தாவா வழக்கு 1 லக்க சொத்தில் உணவு மற்றும் தேநீர் கடை வைத்து தொழில் செய்து அனுபவித்து வந்துள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது.

iii) தாவா வழக்கு 1 லக்க சொத்தில் 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இல்லாத விபரம் தெரிந்து கொண்டே 5ம் எதிர்மனுதார்/5ம் பிரதிவாதியை ஏமாற்றி தாவா வழக்கு 1 லக்க சொத்திற்கு 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தனது பெயருக்கும் அவரது சகோதரர் பெயருக்கும் சர்வே 1602/4 நம்பருக்கு பட்டா பெறும் பொழுது தாவா 1 லக்க சொத்தையும் சேர்த்து மோசடியாக 1012 நம்பராக 1996ம் ஆண்டில் பட்டா பெற்றுள்ளார். தாவா 1 லக்க சொத்தைப் பொறுத்து ஏற்பட்டுள்ள 1012 நம்பர் பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென்று மனுதாரர் தாவா வழக்கில் பரிகாரம் கேட்க வேண்டியது அவசியமாக உள்ளது.

iv) தாவா 1 லக்க சொத்தின் சர்வே 1622/3 நம்பர் பு.ஹெக். 0.00.44 அளவுள்ள இடத்தை மட்டுமே உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில்

மேற்கண்டபடி கடை வைத்து தொழில் செய்து வருகிறார். அவ்வாறு இருக்கும் நிலையில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு தாவா வழக்கு 1 லக்க சொத்தில் எவ்வித பாத்தியமும், உரிமையும் இல்லை என்ற விபரம் தெரிந்து கொண்டே 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் தியாகராஜ குருக்களும் சேர்ந்து 02.06.2015ம் தேதிய பாகப் பத்திரத்தில் A மற்றும் B செடியூலில் 1 லக்க சொத்தில் தாவா 1 லக்க சொத்தையும் கூடுதலான இடத்தையும் சேர்த்து சர்வே 1622/3 நம்பரில் 882 சதுரடியுள்ள இடத்தை சேர்த்து எழுதிக் கொண்டுள்ளார்கள். மேற்கண்ட பாகப் பத்திரத்தில் A செடியூலில் 1 லக்க சொத்தும், B செடியூலில் 1 லக்க சொத்தும் மேற்கண்ட இருவர்களுக்கும் எவ்வித பாத்தியமும் உரிமையும் இல்லை.

v) மேலும் சர்வே 1622/3 நம்பருக்கு கட்டுப்பட்டதே பு.ஹெக். 0.00.44க்கு அதாவது 1 செண்டு மட்டுமே உள்ள இடமாகும். அவ்வாறு இருக்கும் நிலையில் மேற்படி பாகப்பத்திரத்தில் A செடியூலில் 1 லக்க சொத்தில் சர்வே 1622/3 நம்பரில் 882 சதுரடி அதாவது செண்டு 02, 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரருக்கும் பாத்தியப்பட்டதாக மேற்படி பாகப் பத்திரத்தில் மோசடியாக எழுதிக் கொண்டுள்ளார்கள். ஆகவே மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா 1 லக்க சொத்தையும், 4, 5 எதிர்மனுதார்கள்/4, 5 பிரதிவாதிகளின் தமிழ்நாடு அரசுக்கு பாத்தியப்பட்ட இடத்தையும் சேர்த்து 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் சேர்ந்து 02.06.2015ம் தேதியில் எழுதிக் கொண்டுள்ள பதிவு பாகப் பத்திரத்தில் A செட்யூலில் கண்டுள்ள 1 லக்க சொத்தைப் பொறுத்து B செடியூலில் கண்டுள்ள 1 லக்க சொத்தை பொறுத்தும் மேற்படி பாகப் பத்திரம் சட்டப்படி செல்லத்தகாத Null and void பத்திரம் என்று தாவா வழக்கில் பரிகாரம் கேட்க வேண்டியது அவசியமாக உள்ளது.

vi) மனுதாரர் ஏற்கனவே 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் பேரில் தாவா 1 லக்க சொத்தைப் பொறுத்து மோசடியாக ஏற்படுத்தப்பட்ட 1012 நம்பர் பட்டாவை ரத்து செய்ய விளம்புகை பரிகாரம் கண்டும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் ஆக இருவர்களும் சேர்ந்து தாவா 1 லக்க சொத்தை பொறுத்தும் அவர்களுக்கு உரிமையில்லாத சொத்தையும் சேர்த்து மோசடியாக 02.06.2015ம் தேதியில் எழுதிக் கொண்ட பதிவு பாகப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கண்டும் அசல் வழக்கை திருத்தம் செய்ய வேண்டுமென்று மனுதாரர் ஏற்கனவே இ.ம.எண்.10/2025ல் மனு தாக்கல் செய்து அதில் 3ம் எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் பாரா 4ல், மேற்படி மனுவில் திருத்தம் செய்யக் கோரும் விபரம் முற்றிலும் இ.ம.எண்.8/2024 க்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

vii) மனுதாரர் மனுவில் முற்றிலும் வழக்குரையை திருத்தம் செய்யக் கோரியுள்ளதால், இம்மனு நிலைக்கதக்கதல்ல என்று கூறப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு மனுதாரரது தரப்பில் பரிசீலனை செய்யும் பொழுது இ.ம.எண்.8/2024 மனுவானது 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை மனுதாரரது வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென்று உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் படி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும். மேற்படி மனுவில் ஏற்பட்டுள்ள உத்தரவுப்படி 2 முதல் 5 எதிர்மனுதார்களை வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளை மட்டுமே திருத்தம் செய்ய திருத்தல் மனு தாக்கல் செய்ய வேண்டுமென்ற விபரமும், இ.ம.எண்.10/2025 மனுவில் கூறப்பட்டுள்ள மற்ற விபரங்களை தனியாக திருத்தல் மனு தாக்கல் செய்ய வேண்டுமென்று விபரம் தெரிந்து மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.10/2025 மனுவை Not pressed என்று 05.08.2025ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

viii) அதன் பின்னிட்டு 2 முதல் 5 எதிர்மனுதார்களை, 2 முதல் 5 பிரதிவாதிகளாக இ.ம.எண்.14/2025 திருத்தல் மனு மூலம் திருத்தம் செய்யப்பட்டு, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள விளம்புகை பரிகாரங்கள் ஏற்கனவே இ.ம.எண்.10/2025 மனுவில் கூறப்பட்டவைகளாகும். தாவா வழக்கில் கண்டுள்ள சொத்துக்களின் பேரில் விளம்புகை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. தாவா 1 லக்கச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் பேரில் ஏற்பட்ட 1092 நம்பர் பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென்று விளம்புகை பரிகாரமும், தாவா வழக்கு 1 லக்க சொத்தைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரரும், அவரது சகோதரர் ஆக இருவர்களும் சேர்ந்து 02.06.2015ம் தேதியில் எழுதிக் கொண்டுள்ள பாகப் பத்திரத்தில் A செடியூலில் கண்டுள்ள 1 லக்க சொத்தைப் பொறுத்தும், B செடியூலில் கண்டுள்ள 1 லக்க சொத்தைப் பொறுத்தும் மேற்படி பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரமும் தாவா வழக்கில் சேர்த்துக் கொள்வதால் வழக்கின் தன்மைக்கும், வழக்குமூலத்திற்கும் எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. ஆகவே மேற்கண்ட பரிகாரங்கள் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே அசல் வழக்கில் மனுவில் கண்டுள்ளபடி திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

i) மனுதாரர் மனு பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிருரையில்

வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரரேகண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) மனுதாரர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரமும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் இன்னும் மற்ற பரிகாரங்களும் கண்டு அ.வ.எண்.331/2015 வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை மனுதாரரின் தகப்பனார் பழனிச்சாமி ஆர்ஜிதம் செய்து அந்த இடத்தில் உணவகம், தேநீர் கடை வைத்து அவரது அனுபவத்தில் 60 ஆண்டுகள் அனுபவித்து வருகிறார்கள் என்பதும் மேற்படி முகவரிக்கு தாராபுரம் அமர்வு நீதிமன்றத்தின் அமர்வு வழக்கு எண்.41/1993 அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது என்பதும் அதனால் மனு சொத்தை மனுதாரரின் தகப்பனார் நீண்ட நெடுங்காலங்களாக அனுபவித்து வருகிறார் என்பதும் உண்மையல்ல.

iii) மனு சொத்தை பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் அவரது பெயருக்கும், அவரது சகோதரர் பெயருக்கும் பட்டா பெற்றார் என்பதும் உண்மையல்ல. மேற்படி மனு சொத்திற்கான பட்டாவானது அரசு அதிகாரியால் ஆய்வுக்கு பின்னர் முறையாக பெற்ற ஒன்றாகும். தாவா 1 லக்கமிட்ட சொத்து பு.ஹெக்.0.00.44 இடத்தை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் அந்த இடத்தில் தேநீர் கடை வைத்து நீண்ட நெடுங்காலங்களாக மனுதாரர் அனுபவித்து வருகிறார் என்பது உண்மையல்ல. தாவா சொத்தை பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் அவரது சகோதரர் தியாகராஜ குருக்களும் கடந்த 02.062015ம் தேதி பாகபத்திரம் எழுதிக்கொண்டார்கள். மேற்படி பாகபத்திரத்தில் கூடுதல் இடத்தையும் சேர்த்து எழுதிக் கொண்டதாகவும் மேற்படி பாகபத்திரத்தில் சர்வே

எண்.1622/3 க்கு அதிக சதுரடிகள் கண்டு மோசடியாக பாகபத்திரம் எழுதிக் கொண்டதாகவும் கூறுவது உண்மையல்ல.

iv) தாவா 1 லக்கமிட்ட சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட இடம் என்பதும் அதனால் மேற்படி பாகபத்திரம் செல்லாது என விளம்புகை செய்யக்கோருவது எந்த வகையிலும் நிலைக்கதக்கதல்ல. இம்மனுவில் தாவா 1 லக்கமிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் தியாகராஜ குருக்கள் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்யக்கோருவது சட்டத்தின் பால் நிலைக்கத்தக்கதல்ல. பட்டாவை ரத்து செய்யவேண்டும் என்றால் உரிய வருவாய் துறை அதிகாரியிடம் மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையிலேயே ரத்து செய்ய இயலும். அதை தவிர்த்து சிவில் நீதிமன்றத்திற்கு பட்டாவை ரத்து செய்ய அதிகாரம் இல்லை. மேற்படி பரிகாரம் ஆனது பட்டா பாஸ் புத்தகம் சட்டத்திற்கு புறம்பான ஒன்றாகும்.

v) அதேபோல் 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் தியாகராஜ குருக்களும் கடந்த 02.06.2015 ம் தேதி செய்து கொண்ட பாகபத்திரத்தில் 1 லக்கமிட்டவரின் சொத்தை பொறுத்து செல்லாது என பரிகாரம் கோருவதும் எந்த வகையிலும் நிலைக்கதக்கதல்ல. ஏனென்றால் மனுதாரர் 2015 ல் வழக்கை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் கடந்த 01.03.2016 தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி எதிர்வழக்குரையிலேயே 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் தியாகராஜகுருக்கள் பாகம் செய்த விபரம் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் நிலையில் 10 வருடங்களுக்கு பின்னிட்டு 02.06.2015 ம் தேதிய பாக பத்திரத்தை ரத்து செய்ய கோர இயலாது.

vi) மேற்படி பரிகாரம் ஆனது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் வழக்கில் திருத்தக்கோரும் விவரங்கள் அனைத்தும் வழக்குரைக்கு மாறான ஒன்றாகும். மனுதாரர் தாவா சொத்தை பொறுத்து மதிப்பீடு செய்துள்ள விபரம் தவறானது. மனுதாரர் திருத்தம் செய்யக்கோரும் மனுவுடன் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யாததால் காலம் கடந்து சட்டத்திற்கு அப்பாற்பட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர் தரப்பில் 2003-2-L.W.21 Sampath KumarVs. Ayyakannnu and Another, 2000 (III) CTC 389 Sanjeevi Ammal and 3 Others Vs. Narasimha Naicker and another, 2000-2-L.W.794 Saraswathi Ammal Vs. Ponnammal and Another, 1996 L.W. 119 A.M.S.Paramasiva Mudaliar Vs. A.M.S.Munirathina Mudaliar and Another என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:-**

மனுதாரர்/வாதி தரப்பில் தாவா 1 லக்கச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் பேரில் ஏற்பட்ட 1092 நம்பர் பட்டாவை ரத்து

செய்ய வேண்டுமென்று விளம்புகை பரிகாரமும், தாவா வழக்கு 1 லக்க சொத்தைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரரும், அவரது சகோதரர் ஆக இருவர்களும் சேர்ந்து 02.06.2015ம் தேதியில் எழுதிக் கொண்டுள்ள பாகப் பத்திரத்தில் A செடியூலில் கண்டுள்ள 1 லக்க சொத்தைப் பொறுத்தும், B செடியூலில் கண்டுள்ள 1 லக்க சொத்தைப் பொறுத்தும் மேற்படி பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரமும் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் எனவே அசல் வழக்கில் மனுவில் கண்டுள்ளபடி திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா 1 லக்கமிட்ட சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட இடம் என்பதால் மேற்படி பாகபத்திரம் செல்லாது என விளம்புகை செய்யக்கோருவது எந்த வகையிலும் நிலைக்கதக்கதல்ல என்றும் தாவா 1 லக்கமிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் தியாகராஜ குருக்கள் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்யக்கோருவது சட்டத்தின் பால் நிலைக்கத்தக்கதல்ல என்றும் பட்டாவை ரத்து செய்யவேண்டும் என்றால் உரிய வருவாய் துறை அதிகாரியிடம் மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையிலேயே ரத்து செய்ய இயலும் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது முதலில் மனுதாரர்/வாதியால் தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டு கடந்த 02.03.2016 அன்று பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள்

வனையப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 27.01.2022 அன்று மனுதாரர்/வாதியால் தாவா சொத்தை சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் ஸ்தல பார்வை செய்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி இ.ம.எண்.137/2022 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு கடந்த 16.07.2025 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

7. கடந்த 01.02.2023 அன்று மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யக்கோரி இ.ம.எண்.2/2023 (இ.ம.எண்.89/2023) என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அம்மனு 20.06.2024 அன்று அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் அசல் வழக்கானது விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 07.08.2025 அன்று 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் கட்சி சேர்க்க அனுமதிகோரி மனுதாரரால் இ.ம.எண்.14/2025 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு கடந்த 25.08.2025 அன்று அனுமதிக்கப்பட்டு, 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டு, கடந்த 12.11.2025 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 24.11.2025 அன்று கூடுதல் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்து மனு முடிவடையும் வரையில் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கக்கோரி இ.ம.எண்325/2023 மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 05.02.2026 அன்று மேற்படி மனு தள்ளுபடி

செய்யப்பட்டு அசல் வழக்கானது சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 02.12.2025 அன்று மனுவில் கண்டுள்ள விபரப்படி வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தல் மனுவில் தாவா வழக்குரையில் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 1 லக்க சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் A.தியாகராஜ குருக்கள் பெயரில் ஏற்பட்டுள்ள 1012 நம்பர் பட்டாவை 5ம் பிரதிவாதி ரத்து செய்து கொடுக்கும்படி 5ம் பிரதிவாதி பெயரில் செயலுறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கும்படிக்கும், வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 1 லக்க சொத்தையும் சேர்த்து 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரரும் சேர்ந்து எழுதிக் கொண்ட 02.06.2015ம் தேதிய ஆவண எண்.2438/2015 எண்ணாக பதிவு செய்துள்ள பாக பத்திரத்தில் தாவா 1 லக்க சொத்தைப் பொறுத்து செல்லத்தக்கதல்ல என்று Null and Void என்ற விளம்புகை பரிகாரம் வழங்கும்படிக்கும் என்று சேர்த்து கொண்டு திருத்தம் செய்ய வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

9. வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து அசல் வழக்கானது மனுதாரரால் தாவா சொத்துக்களைப் பொறுத்து முதலில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு பின்னிட்டு இ.ம.எண்.2/2023 (இ.ம.எண்.89/2023) மனுவில் 10.06.2024 தேதியிட்ட இந்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அசல் வழக்குரை தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு உத்தரவை பரிசீலிக்கும்போது இந்நீதிமன்றம்

02.03.2016 தேதியில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு தாவா சொத்தின் உரிமை மூலம் குறித்து 1ம் எதிர்மனுதாரர் மறுத்து கூறியுள்ள நிலையில் மிக காலதாமதமாக காலவரையறை கடந்து மனுதாரரால் தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கண்டு செலவுத்தொகையுடன் மேற்படி மனுவை அனுமதித்து உத்தரவிட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலம் என்றும் அதை மனுதாரரரின் தகப்பனார் 60 ஆண்டுகளுக்கு முன்பு ஆர்ஜிதம் செய்து அதில் தேநீர் கடை, உணவகம் நடத்தி வந்ததன் அடிப்படையில் மனுதாரருக்கு பாத்தியப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மேற்படி சங்கதிகள் மறுக்கப்பட்டுள்ளது.

10. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது 1ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் எதிர்வழக்குரை கடந்த 02.03.2016ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்வழக்குரையில் 9ம் பத்தியில் **காங்கயம் தனி வட்டாட்சியரால் 02.07.1996ம் தேதி தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி மற்றும் அவரது சகோரர் தியாகராஜ குருக்கள் ஆகியோர் பெயரில் மனைவாரி பட்டா எண்.1012 ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது** என்றும் **தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பொறுத்து பிரதிவாதியும் அவரது சகோதரர் தியாகராஜ குருக்களும் கடந்த 02.06.2015ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றும் அதில் ஏ அட்டவணை சொத்துக்கள் பிரதிவாதிக்கும் பி அட்டவணை சொத்துக்கள் தியாகராஜ குருக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது** என்றும் சொல்லப்பட்டுள்ளது.

11. மேற்படி 1ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் பரிசீலனையில் இருந்து கடந்த 02.03.2016ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலேயே தாவா சொத்தைப் பொறுத்து 02.07.1996ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் மற்றும் தியாகராஜ குருக்கள் ஆகியோர் பெயரில் மனைவாரி பட்டா எண்.1012ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்தைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் மற்றும் தியாகராஜ குருக்கள் ஆகியோரிடையே கடந்த 02.06.2015ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டே மேற்படி எதிர்வழக்குரை 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

12. எனவே அசல் வழக்கில் கடந்த 02.03.2016ம் தேதி 1ம் எதிர்மனுதாரரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட சமயத்திலேயே தாவா சொத்தைப் பொறுத்து 02.07.1996ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் மற்றும் தியாகராஜ குருக்கள் ஆகியோர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற சங்கதியும் தாவா சொத்தைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் மற்றும் தியாகராஜ குருக்கள் ஆகியோரிடையே கடந்த 02.06.2015ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்ற சங்கதியும் குறிப்பிடப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இம்மனுவானது மனுதாரரால் அசல் வழக்கில் திருத்தங்கள் செய்ய அனுமதிக்கக் கோரி கடந்த 02.12.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. எனவே மேலேகண்ட பரிசீலனைகளில் இருந்து அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து 3 வருட கால

வரையறைக்குள் இம்மனுவில் கண்டுள்ள திருத்தல் பரிகாரங்களான வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 1 இலக்க சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் A.தியாகராஜ குருக்கள் பெயரில் ஏற்பட்டுள்ள 1012 நம்பர் பட்டாவை 5ம் பிரதிவாதி ரத்து செய்து கொடுக்கும்படி 5ம் பிரதிவாதி பெயரில் செயலுறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கும்படிக்கும், வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 1 இலக்க சொத்தையும் சேர்த்து 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் சேர்ந்து எழுதிக் கொண்ட 02.06.2015ம் தேதிய ஆவண எண்.2438/2015 எண்ணாக பதிவு செய்துள்ள பாக பத்திரத்தில் தாவா 1 லக்க சொத்தைப் பொறுத்து செல்லத்தக்கதல்ல என்று Null and Void என்று விளம்புகை பரிகாரம் வழங்கும் படிக்கும் அசல் வழக்கில் திருத்தங்கள் கோரி மனு தாக்கல் செய்யாமல் சட்டப்படியான காலவரையறை கடந்து சுமார் 9 வருடங்கள் கழித்து மேற்படி இம்மனுவில் கண்ட திருத்தல் பரிகாரங்களை பொறுத்து அசல் வழக்கில் திருத்தம் கோரி இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

14. மேலும் மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 1 இலக்க சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் A.தியாகராஜ குருக்கள் பெயரில் ஏற்பட்டுள்ள 1012 நம்பர் பட்டாவை 5ம் பிரதிவாதி ரத்து செய்து கொடுக்கும்படி 5ம் பிரதிவாதி பெயரில் செயலுறுத்துக்கட்டளை வழங்க வேண்டும் என்ற திருத்தல் பரிகாரமானது பட்டா பாஸ் புத்தகம் சட்டம் பிரிவு 14ன்படி தடைப்பட்டுள்ளது. எனவே மேற்படி பரிகாரத்தை பொறுத்து வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை.

15. மேலும் வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் அசல் வழக்கில் இன்னும் சாட்சிய விசாரணை துவங்கப்படவில்லை. இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றும் வகையிலோ அல்லது புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கும் வகையிலோ இல்லை. இந்த மனுவில் கண்டுள்ள திருத்தத்தை மேற்கொள்ளும் பட்சத்தில் தான் மனுதாரர் தரப்பு வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் இந்த திருத்தல் மனுவில் மனுதாரர்/வாதி தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு மனுதாரர்/வாதி வசமே உள்ளது.

16. இந்நீதிமன்றம் 2015 (6) CTC 562 என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது அதில்

Limitation Act, 1963 (36 of 1963) Article 58 – Specific Relief Act, 1963 (47 of 1963), Section 37 – Code of Civil Procedure, 1908 (5 of 1908) Order 6 Rule 17 – Suit for Declaration of Title – Computation of Limitation – Amendment of Plaint and Doctrine of Relation back on limitation – Suit for bare injunction restraining defendant from interfering with possession filed – Defendant filed written statement disputing title of plaintiff to suit property – Suit on being dismissed appealed and suit remanded – Plaintiff sought to amend pleading as well as prayer to include relief of declaration – Such amendment made after three years from date on which defendant filed written statement and disputed title of plaintiff – Relief barred by limitation and time starts running from date on which Written statement disputing title of plaintiff was filed – Doctrine of Relation Back not applicable as amendment was ordered subject to limitation என்று சொல்லப்பட்டுள்ளது.

17. மேற்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தாவா சொத்தைப் பொறுத்து வாதியின் உரிமைமூலம் பிரதிவாதியால் மறுக்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அதன் மேல்முறையீட்டில் கீழமை நீதிமன்றத்திற்கு மீண்டும் விசாரணைக்காக வழக்கு அனுப்பப்பட்ட நிலையில் வாதி விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கை திருத்த பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் வாதியின் உரிமையை மறுத்த நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மனு செய்ததில் மேற்படி விளம்புகை பரிகாரம் காலவரம்பு சட்டத்தால் தடைசெய்யப்பட்டதாக கருதப்பட்டு காலவரம்பு கணக்கிடுதல், வாதியின் உரிமையை பிரதிவாதி மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தொடங்குகிறது என்பதாலும் மேலும், மனு திருத்தம் காலவரம்பு நிபந்தனைக்கு உட்பட்டு அனுமதிக்கப்பட்டதால், "Relation Back" கோட்பாடு இங்கு பொருந்தாது என்று சொல்லப்பட்டுள்ளது.

18. இந்த வழக்கிலும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் கடந்த 02.03.2016ம் தேதி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட சமயத்திலேயே தாவா சொத்தைப் பொறுத்து 02.07.1996ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் மற்றும் தியாகராஜ குருக்கள் ஆகியோர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற சங்கதியும் தாவா சொத்தைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் மற்றும் தியாகராஜ குருக்கள் ஆகியோரிடையே கடந்த 02.06.2015ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்ற சங்கதியும் குறிப்பிடப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள

நிலையில் இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் பொறுத்த திருத்தம் பொறுத்த காலவரம்பு கணக்கிடுதல், வாதியின் உரிமையை 1ம் பிரதிவாதி மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தான் தொடங்குகிறது என்றும் இந்த மனுவிற்கும் "Relation Back" கோட்பாடு பொருந்தாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன்தீர்ப்புரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

19. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் இந்த திருத்தல் மனுவில் மனுதாரர் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரமானது பட்டா பாஸ் புத்தகம் சட்டம் பிரிவு 14ன்படி தடைப்பட்டுள்ளதாலும் மேற்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பொறுத்து இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்தும் மேலேகண்ட விவாதங்களின் அடிப்படையிலும் அசல் வழக்கானது 2016ம் ஆண்டிலிருந்து விசாரணை துவங்கப்படாமல் நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும் மேற்கொண்டு அசல் வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனைகளை இறுதியாக தீர்வு காணும் பொருட்டும் மேற்கொண்டு இதே வழக்கு பிரச்சனைக்காக உபய தரப்பினர்களுக்கிடையே புதிய வழக்குகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், திருத்தல் மனுவில் மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர் வசமே உள்ளது என்பதாலும், மேற்படி இம்மனுவில் கண்டுள்ள விளம்புகை பரிகாரம் பொறுத்த வழக்குரை திருத்தல் பரிகாரம் காலவரையறையால்

பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பொறுத்து அசல் வழக்கில் தான் தீர்மானம் செய்ய இயலும் என்பதாலும் இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் பொறுத்த திருத்தங்கள் பொறுத்து காலவரம்பு கணக்கிடுதல், மனுதாரர்/வாதியின் உரிமையை 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தான் தொடங்குகிறது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும் மேலே கண்ட விவாதங்களின்படியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் அசல் வழக்கானது கடந்த 2015ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டி மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனுவில் கண்டுள்ள விளம்புகை பரிகாரம் பொறுத்த திருத்தங்கள் பொறுத்து மட்டும் பகுதியாக அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/வாதி, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ரூ.5,000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 18.03.2026ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 18.03.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.13 18:29:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.13 18:29:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.